

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி மாவட்டக் கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு மற்றும் பங்கேற்றவர்களுக்கு அமைச்சர் ஆர்.காந்தி சான்றிதழ் கேடயம் மற்றும் பரிசு பொருட்கள் ஊக்க தொகை வழங்கினார். உடன் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, நடுவர்கள் நாஞ்சில் சம்பத், தமிழ் மகன், சிங்கை பிரபாகரன், திருத்தணி எம்.பூபதி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், கே.திராவிட பக்தன், ஆர்.இ.டி.ஆதிசேசன், வி.சி.ஆர்.குமாரன், உதயமலர் பாண்டியன், மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், கிஷோர், நகரக் கழக செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தா.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், ஆர்.திலீபன், உள்பட பலர் உள்ளனர்.



குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் சீருடை வழங்கும் நிகழ்ச்சியில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வழங்கினார். அருகில் குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஒன்றிய அரசுத் துறைகளில் 15 ஆண்டுகள்

# பணிபுரிந்து ஓய்வு பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும்!

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

*சென்னை, ஆக.26*

ஒன்றிய அரசு துறையில் 15 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெரும் மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய திட்டத்தின்கீழ்ஓய்வூதியம் வழங்கவேண்டும் என தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ.தங்கம் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

மாற்றுத்திறனாளிகள் மத்திய,மாநில அரசு துறைகளில் பணிகளில் சேருவதற்கு போட்டி தேர்வுகளில் பங்குபெற அவர்களுக்கான வயது தளர்வு 40 , 45 வயது”வரை வயது வரம்பு தளர்வு செய்யப்படுகிறது.

இதனால், மாற்றுத்திறனாளிகள் காலம் கடந்து பணியில் சேருகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் பணியில் சேர்ந்த பணிக்காலங்களை கணக்கிடும் போது. மாற்றுத்திறனாளிகளின் பணிக்காலங்கள் 15, 16, 17 ஆண்டுகளுக்கு மிகு குறைவான பணிக்காலமாக கணக்கிடப்படுகிறது.

இதனால் மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஓய்வூதிய திட்டத்தின்படி 25 ஆண்டுகள் பணிக்காலம் முடித்தவர்களுக்கு மட்டுமே புதிய ஓய்வூதியம் பெற தகுதியானவர்களாக கருதப்படுகிறார்கள்.

ஆனால் 4045 வயது உள்ளவர்கள், அரசு அறிவிக்கும் வயது தளர்வின் காரணமாக பணியில் சேரும்போது மாற்றுத்திறனாளிகளின், பணி காலம் கணக்கிடும்போது புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதியற்றவர்களாக பாதிக்கப்படுகிறார்கள்.

இதனால், மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஓய்வூதிய திட்டத்தில் மத்திய அரசு துறையில் பணியாற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க அவர்களுக்கென தனிக் கவனம் செலுத்தியும், சிறப்பினமாக கருதியும் அவர்கள் ஓய்வுதியம் பெறுவதற்கு மாற்றுத்திறனாளிகளின் பணிக்காலம் 15 ஆண்டுகள் நிர்ணயித்து மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் வழங்குவதற்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக மத்திய அரசை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தனது அறிக்கையில் ரெ.தங்கம் தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘என் உயிரினும் மேலான கலைஞர்’ நூற்றாண்டு நிறைவு பேச்சுப்போட்டி!

## ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

*திருவள்ளூர், ஆக.26*

என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு நிறைவு பேச்சுப்போட்டி திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் முன்னாள் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. தலைமையில் ஆவடி அடுத்த திருமுல்லைவாயில் எம்.எஸ்.கே. டைமன் மஹால் நடைபெற்றது.

இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், தெ.பிரியாகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் என்றென்றும் பெரியார். ஏன்?, அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலைநோக்குப் பார்வை மானமிகு சுயமரி யாதைக் காரர் கலைஞர், கலைஞர்நவீன தமிழ்நாட்டின் சிற்பி, இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதிக் காவலர் கலைஞர், தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க., பேசி வென்ற இயக்கம், திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகிய தலைப்பில் 150 மேற்பட்டோர் கல்லூரி மாணவர்கள், மாணவிகள், இளைஞர்கள் கலந்து கொண்டு பேச்சுப் போட்டியில் பேசினார்கள்.

இதில் நடுவராக பேராசிரியர் சுப வீரபாண்டியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவை சம்பத் ஆகியோர் பங்கேற்றார்கள். பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் மற்றும் பங்கேற்றவர்களுக்கும் பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் பரிசு பொருட்கள் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக நிர்வாகிகள் ம.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பா. நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி.ராஜேந்திரன், ஜி.விமல் வர்ஷன், காஞ்சனா சுதாகர், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், மேயர் உதயகுமார், பேபிசேகர், பொன். விஜயன், என்.இ.கே. மூர்த்தி, டி.தேசிங்கு, ப.ச. கமலேஷ், ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், ஜி.ஆர். திருமலை, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, அமுதா பேபிசேகர், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஸ்ரீதர், அஃப்ரிடி, சதீஷ், புவனேஷ், மகேஷ் ரங்கநாதன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள். முடிவில் ஜி.துர்கா பிரசாத் நன்றி கூறினார்.

